

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 24.12.2025


# இறுதிக்கட்ட கவனம் தேவை!

S.I.R நடவடிக்கை மிகுந்த சர்ச்சையை நாடு முழுவதும் ஏற்படுத்தி வருகிறது. அதில் தமிழ்நாடும் தப்பவில்லை.

**S.I.R நடவடிக்கைகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகி இருக்கிறது. 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்கள் நீக்கப் பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. 97 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருப்பது இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம்.**

இரட்டைப் பதிவு உள்ளவர்களாக 3 லட்சத்து 98 ஆயிரத்து 278 பேர் சொல்லப்பட்டு உள்ளார்கள். உயிரிழந்தவர்களாக 26 லட்சத்து 94 ஆயிரத்து 672 பேர் அறிவிக்கப்பட்டுள்ளார்கள். 66 லட்சத்து 44 ஆயிரத்து 881 பேர் இடம் பெயர்ந்தவர்களாக சொல்லப்பட்டு உள்ளார்கள். பெரும்பாலான வாக்காளர்கள் தங்களது முகவரியில் வசிக்காததால் கண்டறிய முடிய வில்லை என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

“முந்தைய முகவரியில் இல்லாத காரணத்தால் வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் தேடிச் சென்ற குறிப்பிட்ட முகவரியில் வாக்காளர்கள் இல்லாததே பெருவாரியான வாக்காளர்கள் நீக்கப்படக் காரணம். அந்த வாக்காளர்கள் வேறு பகுதிக்கு இடம் மாறி இருக்கலாம். அல்லது வேறு காரணத்தால் கணக்கீட்டுப் படிவத்தைக் கொடுக் காமல் இருந்திருக்கலாம்” என்று தேர்தல் ஆணையம் சொல்கிறது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக சென்னை மாவட்டத்தில் 14 லட்சத்து 25 ஆயிரத்து 18 பேர் நீக்கப்பட்டுள்ளார்கள். கோவை மாவட்டத்தில் 6 லட்சத்து 50 ஆயிரத்து 590 பேர் நீக்கப்பட்டு உள்ளார்கள். செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நீக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகம். அரியலூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில்தான் நீக்கப்பட்டோர் எண்ணிக்கை குறை வாக உள்ளது.

இந்த வகையில் தமிழ்நாட்டில் தற்போது மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 5 கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 756 மட்டுமே.

வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட வாக்காளர்கள் தங்களின் பெயரை மீண்டும் சேர்க்க படிவம் 6-ஐ பூர்த்தி செய்து ஆவணங்களுடன் அளிக்க வேண்டும். தன் உறுதிமொழிப் பத்திரத்தை அளிக்க வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சொல்லி இருக்கிறார்.

டிசம்பர் 20 முதல் ஜனவரி 18 வரை வாக்குச் சாவடி வாரியாக சிறப்பு முகாம் களுக்குச் சென்று உரிய ஆவணங்களுடன் படிவங்களை நிரப்பி அளிக்க வேண்டும். பரிசீலனைக்குப் பிறகு அவர்களின் பெயர் இறுதி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டவர்களும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களும் அளிக்கும் படிவம் 6 விண்ணப்பத்தையே நிரப்பித் தர வேண்டும். அதில் வயது மற்றும் இருப்பிட முகவரிக்காக தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ள 12 ஆவணங்களில் ஒன்றை வழங்க வேண்டும். முந்தைய தேர்தலில் வாக்களித்தவர்கள் வாக்க ளித்த இடத்தைக் குறிப்பிட வேண்டும்.

இவை அனைத்தையும் மிகச் சரியாகக் கவனமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இறுதிக்கட்ட கவனம் தேவை.

**அவசர அவசரமாக இப்பணிகளைத் தேர்தல் ஆணையம் செய்துள்ளது. ஒன்று அல்லது இரண்டு ஆண்டு காலம் செய்ய வேண்டிய பணியை ஒரே மாதத்தில் செய்தது. அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் நல்ல மழை பெய்து பல்வேறு மாவட டங்களில் தொடர் விடுமுறைகள் விடும் சூழலில் இப்பணிகள் செய்யப்பட்டது. அதனால்தான் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளால் இப்பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக் கப்பட்டது. உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அது எதைப் பற்றியும் தேர்தல் ஆணையம் கவலைப்படவில்லை. இந்த எதிர்ப்புகளை மதிக்கவே இல்லை. தங்களது எஜமானர்கள் என்ன கட்டளை இட்டார்களோ அதையே கண்ணை மூடிக் கொண்டு மற்ற மாநிலத்தில் செய்ததைப் போல இங்கும் செய்தார்கள்.**

இறந்தோர், இடம்பெயர்ந்தோர், இரட்டைப் பதிவு செய்திருப்போர் என்ற காரணங்கள் முறையாக இருக்கலாம். ஆனால் இது உண்மையானது தானா என்பதை நீக்கப்பட்டவர் பட்டியலை எடுத்துச் சென்று வீதி வீதியாக, வீடு வீடாகப் போய் பார்த்தால் தான் உண்மை புரியும்.

இறந்து போனதாக அறிவிக்கப்பட்டவர்களை அழைத்து வந்து அவர் களோடு டீ சாப்பிட்டார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. அதுபோல தமிழ் நாட்டிலும் இருக்காது என்பதில் என்ன நிச்சயம்? எத்தனை பேர் அப்படி வரப் போகிறார்களோ?

இத்தகைய சூழலில் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையை ஒவ்வொரு வாக்காளரும் கண்காணிக்க வேண்டும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

இதற்கான சரியான எச்சரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். நேற்றைய தினம் காணொலி வாயிலாக நடைபெற்ற தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத் தில் உரையாற்றும் போது, **“ஒரே ஒருவர்கூட தவறுதலாக விடுபட்டு இருந்தா லும் வாக்காளர் பட்டியலில் இணைக்க வேண்டும்”** என்று குறிப்பிட்டு உள்ளார்.

**“168 தொகுதிகளில் 10 விழுக்காட்டுக்கும் அதிகமான வாக்காளர்கள் நீக்கப் பட்டு உள்ளார்கள். இதை நாம் வாக்குச்சாவடி வாரியாக பார்க்க வேண்டும். உதாரணமாக கும்மிடிப்பூண்டி தொகுதியின் முதல் வாக்குச்சாவடியில் 40 வாக் காளர்கள் நீக்கப்பட்டு உள்ளார்கள். நீக்கப்பட்ட அந்த 40 பேர்களில், 4 பேர் ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பு மூலமாக சேர்ந்தவர்கள். அதில் ஒருவர் இறந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள். அதேபோல, மற்ற 3 பேரையும் எதற் காக நீக்கியுள்ளார்கள் என்று சரி பார்க்க வேண்டும். நாம் இவ்வளவு கவன மாக இருந்தும் - ஒரே வாக்குச்சாவடியில், ஓரணியில் தமிழ்நாட்டில் இணைந்த 4 பேர் விடுபட்டிருக்கிறார்கள் என்றால் நாம் இன்னும் விழிப்போடு செயல்பட வேண்டும்”** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கி றார்கள்.

கும்மிடிப்பூண்டியில் ஒரே ஒரு வாக்குச் சாவடி நிலைமை இது. இதுபோல ஒவ்வொரு வாக்குச் சாவடியையும் கவனிக்க வேண்டும். BLA2-களும், BLC-களும் படிவங்களை சரியாக பயன்படுத்தி, சேர்த்தல் - நீக்குதல் செய்வதை மேற்பார்வையிட வேண்டும் என்றும் அவர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

**கவனம். கவனம். கவனம்.**



தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் முதல் கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (22.10.2025) தொடங்கியது. 2026 சட்டமன்றத் தேர்தலுக்காக தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்குழுவில், தி.மு.க. செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி.செழியன், சொத்து பாதுகாப்புக் குழுச் செயலாளரும், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சருமான பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா, அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, செய்தித் தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மருத்துவ அணிச் செயலாளர் எழிலன் நாகநாதன், சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., ஜி.சந்தானம், இந்திய ஆட்சிப் பணி அலுவலர் (ஓய்வு), கனவு தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.



இந்திய நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு (PAC) தலைவரும், காங்கிரஸ் கட்சியின் தலைவருமான கே.சி.வேணுகோபால் தலைமையிலான குழுவினர், ஆ.ராசா எம்.பி.யின் உதகை நாடாளுமன்ற முகாம் அலுவலகத்திற்கு வருகை புரிந்ததையொட்டி, வரவேற்றபோது எடுத்த படம். அதுபோது ஜெய் பிரகாஷ் – (இந்திய தேசிய காங்கிரஸ் (INC)), திருமதி. அபராஜிதா சராங்கி (பாரதிய ஜனதா கட்சி (BJP)), பாலஷௌரி வல்லபனேனி (ஜனசேனா கட்சி), சக்திசிங் கோஹில் – (இந்திய தேசிய காங்கிரஸ் (INC)), திருச்சி சிவா – திராவிட முன்னேற்றக் கழகம் (DMK) ஆகியோர் உள்ளனர்.

### தமிழர் திருநாள் பொங்கல் விழாவையொட்டி – தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளைப் பறைசாற்றும்

# “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, டிச.24 -**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவையொட்டி தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளைப் பறை சாற்றும் வகையில் நடைபெறும் “சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகளை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.1.2026 அன்று மாலை 6 மணிக்கு தொடங்கி வைக்கிறார். தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். சென்னை மாநக ரின் 20 இடங்களில் 15.01.2026 முதல் 18.1.2026 வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.**

சென்னையில் ஆண்டுதோறும் தை மாதம் “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா” என்ற நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் இந்த நிகழ்ச்சி வரும் 14-ஆம் தேதி துவங்கி நடைபெறவுள்ளது. இதே போன்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நமது மாநிலத்தின் பாரம்பரிய கலைத் திருவிழா வினை நடத்திடுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில், தை மாதம் தொடக் கத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவின் போது ‘சென்னை சங் கமம்-நம்ம ஊரு திருவிழா’ என்ற மாபெரும் கலைவிழா கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. இந்த ஆண்டின் கலை நிகழ்ச் சிகள் 14.1.2026 அன்று மாலை 6 மணிக்கு எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்ட ரங் கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக் கப்பட உள்ளது. இந்த விழா வில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உள்ளன.

தொடக்க விழாவை அடுத்து, ‘சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா’ கலை நிகழ்ச்சி கள் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, மெரினா கடற்கரை, வள்ளுவர் கோட்டம், செம் மொழி பூங்கா, ராயபுரம் ராபின்சன் பூங்கா, எழும்பூர் அரசு அருங்காட்சியகம். ராஜ ரத்தினம் விளையாட்டரங்கம், தி.நகர் நடேசன் பூங்கா, ராஜா அண்ணாமலைபுரம் - அரசு இசைக் கல்லூரி வளாகம், கிண்டி கத்திபாரா சந்திப்பு, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய்நகர் பூங்கா, அசோக் நகர் மாநகராட்சி விளை யாட்டு திடல், வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், ஜாபர்கான் பேட்டை மாநக ராட்சி விளையாட்டுத் திடல், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டு மைதானம், ஆவடி படைத்துறை உடைத் தொழிற்சாலை, பல்லாவரம் கன்டோன்மெண்ட் பூங்கா, தாம்பரம் வள்ளுவர் குருகுலம் பள்ளி மைதா னம் ஆகிய 20 இடங்களில் 15.1.2026 முதல் 18.1.2026 வரை நான்கு நாட் கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற உள் ளன.

### நாட்டுப்புறக் கலை வடிவங்கள்!

‘சென்னை சங்கமம்- நம்ம ஊரு திருவிழாவில்’ தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய் யப்பட்டுள்ள 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட் டம், இறை நடனம், தப்பாட்டம், துடும் பாட்டம், பம்பையாட்டம், கைசிலம் பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், , ஜிக்காட்டம், ஜிம் பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லு பாட்டு, கணியன் கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள் ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாட்டுப்புற வடிவங்களை நிகழ்த்தி பார்வையா ளர்களை பரவசப்படுத்துவார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் கொண்டாட வேண்டிய விழாவாகும் இது என்று குறிப்பிட்டு, நமது பண்பாட்டுப் பெருமிதங்களை, அருங்கலை சிறப்பு களை மீட்டெடுத்து, இளம் தலைமுறை யினர் பார்த்து மகிழத்தக்க வகை யிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாட எற்பாடுகள் செய்யவேண் டும் என்று மாவட்ட ஆட்சியர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழர் பண்பாட்டின் ஆயிரமாயி ரம் ஆண்டுகால தொடர்ச்சியை எடுத் துக்காட்டும் வண்ணம், ‘கீழடி அருங் காட்சியகம்’ அமைத்தும், தற்போது புதியதாக ‘பொருநை அருங்காட்சிய கம்’ அமைத்தும் இந்த அரசு பெருமை மிக்க நம் பண்பாட்டினை, வரலாற் றினை அடுத்த தலைமுறைக்கு தொடர்ந்து கொண்டு செல்லும் பணிக ளில் ஈடுபட்டு வருகிறது.

### இது நமது இல்லத் திருவிழா!

அந்த வகையில் நமது சீர்மிகு மண்சார்ந்த இசையும், கலையும் காலத்தால் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்ற வகை யில் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இதில் அனைவரும் இது நமது இல்லத் திருவிழா என்று இணைந்து கொண்டாடவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட் டுக்கொண்டுள்ளார்.

சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களின் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலை ஞர்களும் கலை நிகழ்ச்சிகள் வழங்க உள்ளனர்.

சென்னையில் விழா நடைபெறும் இடங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பி உண் ணும் பல உணவு வகைகளைக் கொண்ட அரங்குகள் அமைத்து உண வுத் திருவிழாவும் நடத்தப்பட உள் ளது. பூம்புகார் நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கைவி னைப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்பட உள்ளன. தமிழ்நாட் டின் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழும் வாய்ப்புகளும் பார்வையாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்று பாரம்பரி யத்தையும் செழுமையான, பண்பாட் டையும் வெளிப்படுத்தும் நமது நாட் டுப்புறக் கலை வடிவங்களைப் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் பிற நகரங்களில் வாழும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையிலும் சங்க மம் நம்ம ஊரு திருவிழாக்கள் தமிழ் நாடு கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் நடத்தப்பட உள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக் கான நாட்டுப்புறக் கலைஞர்கள் தங் கள் திறமைகளை வெளிப்படுத்தி பயன் பெறவும், தமிழ் மண்ணின் வளமான கலை வடிவங்கள் உயிர்ப்போடு திகழவும் உதவுகின்றன.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப் பில் கூறப்பட்டுள்ளது.



கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு, APT ரோடு, 43வது வட்ட அலுவலகம் முன்பாக மாபெரும் அறுசுவை உணவு வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், கே.இ.பிரகாஷ் எம்.பி. கலந்து கொண்டு உணவு வழங்கினர். மேலும், திருப்பூர் மத்திய, மாவட்ட, மாநகரச் செயலாளர் டி.கே.டி. மு.நாகராஜன், கழக உடன்பிறப்புகள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.